**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 149** **நாள்: 20.09.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு கூடுதலாக 223 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 200 கோட்டங்களிலும் திடக்கழிவு மேலாண்மைத்துறை சார்பாக 19,200 தூய்மை பணியாளர்கள் (தனியார் மற்றும் NULM உட்பட) 5400 மூன்று சக்கர மிதிவண்டிகள், 14,500 காம்பேக்டர் குப்பைத் தொட்டிகள், 370 காம்பேக்டர் (கனரக மற்றும் இலகுரக), 22 டாரஸ் கனரக வாகனங்கள், 19 இயந்திர பொக்லைன்கள், 57 ஸ்கிட் லோடர் இயந்திரங்கள், 21 முன் பளுதூக்கும் லோடர்கள் மூலமாக தினந்தோறும் சுமார் 5400 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டு வருகிறது.

விநாயகர் சதுர்த்தி தினத்தை முன்னிட்டு, 16.09.2018 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி 4, 9, 13, 14 மற்றும் 15 ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட கடற்பகுதிகளில் கரைக்கப்பட்ட விநாயகர் சிலைகளில் கரை ஒதுங்கிய திடக்கழிவுகள் மற்றும் பொதுமக்களால் அன்றைய தினம் பயன்படுத்தப்பட்ட கூடுதல் திடக்கழிவுகள் என சுமார் 223 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் சேகரிக்கப்படும் குப்பைகளில் 60 டன் குப்பைகள் சிறிய அளவிலான மக்கும் குப்பைகள் பதனிடும் (சாதாரண மற்றும் வெர்மி முறையிலும்) பயோ எரிவாயு (மின்சாரம் மற்றும் தெர்மல் முறையிலும்) பதனிடப்படுகிறது. ஒவ்வொரு புதன்கிழமையும் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் 470 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் குப்பைகள் பல்வேறு பயன்பாட்டிற்கும், தார் சாலை அமைக்கவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், பொதுமக்களுக்கு திடக்கழிவு முறைகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், துண்டு பிரசுரங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் 200 கோட்டங்களிலும் பழுதடைந்த குப்பைத் தொட்டிகள் உடனுக்குடன் மாற்றப்பட்டு, நிரம்பி வழியும் குப்பைத் தொட்டிகளை கண்டறிந்து, போர்க்கால அடிப்படையில் கூடுதல் லாரிகள் மூலம் குப்பைகள் அகற்றப்பட்டு வருகிறது. இப்பணிகள் துணை ஆணையாளர் (சுகாதாரம்) அவர்கள் மூலம் தினந்தோறும் கண்காணிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

பொதுமக்களுக்கு திடக்கழிவு மேலாண்மை சம்பந்தப்பட்ட குறைகளை தீர்க்கும் விதமாக (Swachhata App) தனிச் செயலி உருவாக்கப்பட்டதில் 14,083 நபர்கள் பதிவிறக்கம் செய்து பயனடைந்துள்ளனர். இச்செயலி மூலமாக 10,446 புகார்களுக்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை மற்றும் சுகாதாரப் பணிகளில் தொய்வு ஏற்படுத்தும் வகையில் சரிவர செயல்படாத உரிய அலுவலர்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**